+91 - 94427 11140
exampivot.tsi@gmail.com

# உலகம்

## சூடானில் இந்திய பெண் போலீஸ் படை முகாம்

- கிழக்கு ஆப்பிரிக்காவில் சூடான் உள்ளது. இங்கிலாந்தும் எகிப்தும் இணைந்து அந்த நாட்டை ஆட்சி செய்து வந்தன. கடந்த 1956 ஆம் ஆண்டில் சூடான் விடுதலை அடைந்தது. அதன் பிறகு வடக்கு சூடான் பகுதி மக்களுக்கும் தெற்கு சூடான் பகுதி மக்களுக்கும் இடையே உள்நாட்டுப் போர் ஏற்பட்டது.
- இதன் காரணமாக கடந்த 2011 ஆம் ஆண்டில் தெற்கு சூடான் தனி நாடாக உதயமானது. சூடான் மற்றும் தெற்கு சூடான் எல்லையில் அப்யேய் பகுதி அமைந்துள்ளது. இந்த பகுதியை இரு நாடுகளும் சொந்தம் கொண்டாடி வருகின்றன. ஐ.நா சமரசத்தின் காரணமாக அப்யேய் பகுதி சிறப்புப் பகுதியாக நிர்வகிக்கப்பட்டு வருகிறது.
- அந்த பகுதியில் ஐ.நா. அமைதிப் படை பாதுகாப்பு பணியை மேற்கொண்டு வருகிறது. அங்கு முகாமிட்டுள்ள ஐ.நா. அமைதிப் படையில் 315 இந்திய வீரர்கள் உள்ளனர். இந்த சூழலில் சூடானின் அப்யேய் சிறப்பு பகுதியின் காவல் பணிக்காக இந்திய பெண் போலீஸ் படை அனுப்பட்டு உள்ளது. இதில் 125 பெண்கள் இடம் பெற்றுள்ளனர்.
- கடந்த 1960 ஆம் ஆண்டு மதல் ஐ.நா. அமைதிப் படைக்காக பெண் வீராங்கனைகளை அனுப்பி வருகிறது. கடந்த 2007 ஆம் ஆண்டில் இந்தியா சார்பில் ஐ.நா. அமைதிப் படையில் பெண் போலீஸ் படை சேர்க்கப்பட்டது. இது தான் ஐ.நாவின் முதல் பெண் போலீஸ் படை. இந்த படை லைபீரியாவில் காவல் பணியை மேற்கொண்டது.

- தற்போது சூடானின் அப்யேய் பகுதியில் இந்திய பெண் போலீஸ் படை முகாமிட்டு காவல் பணியை தொடங்கியுள்ளது. இத்திட்டத்தில் இந்திய மருத்துவர்கள், கால்நடை மருத்துவர்களும் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றி வருகின்றனர். உலக அமைதிக்காக ஏராளமான இந்திய வீரர்கள் உயிரித் தியாகம் செய்துள்ளனர்.
- 1948 ஆம் ஆண்டு முதல் இதுவரை 2 லட்சத்துக்கும் மேற்பட்ட இந்திய வீரர்கள் ஐ.நா. அமைதிப் படையில் சேவையாற்றி உள்ளனர்.

## பாகிஸ்தான் எல்லையில் ட்ரோன் ரேடாரில் சுரங்கங்களில் ஆய்வு

- இந்தியா – பாகிஸ்தான் இடையே 2,289 கிலோ மீட்டர் தூரத்துக்கு எல்லை அமைந்துள்ளது. பாகிஸ்தானில் இருந்து எல்லை வழியாக தீவிரவாதிகள் ஊடுருவதை தடுக்கும் பணியில் துணை இராணுவமான பிஎஸ்எஃப் ஈடுபட்டு வருகிறது.
- ஆனால் அவ்வப்போது எல்லையில் சுரங்கங்கள் அமைத்து தீவிரவாதிகள் ஊடுருவுவதும் நடந்து வருகிறது. கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் இந்தப் பகுதியில் ஐந்து சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.
- இந்நிலையில் பூமியின் அடியில் உள்ளவற்றை ஊடுருவி ஆய்வு செய்யும் ரேடார்களை 'ட்ரோன்' எனப்படும் சிறிய வகை விமானத்தில் பொருத்தி கண்காணிக்கும் முயற்சியில் பிஎஸ்எஃப் ஈடுபட்டுள்ளது.
- இதற்கான சிறப்பு ரேடார்கள் உள்நாட்டு தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. தற்போது சோதனை முறையில் இவை எல்லையில் பயன்படுத்தப்படுகின்றன.

## இலங்கை - இந்தியா

- கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கையில் அதிக முதலீடு செய்யப்படும் என இந்தியா உறுதியளித்துள்ளது. வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் 2 நாள் பயணமாக இலங்கை சென்றுள்ளார்.
- இந்த சந்திப்பின் போது இலங்கையின் வடக்கு பகுதியில் உள்ள 3 தீவுகளில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டம் அமைப்பதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.
- இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் அலி சப்ரியையும், ஜெய்சங்கர் சந்தித்து பேசினார். சிக்கலான நேரத்தில் இலங்கைக்கு இந்திய துணை நிற்கும் எனவும் அவர் தெரிவித்தார்.
- இலங்கையின் பொருளாதார நிலை மேம்பட அங்கு எரிசக்தி, சுற்றுலா மற்றும் கட்டமைப்பு துறைகளில் அதிக முதலீடுகளை இந்தியா ஊக்குவிக்கும் எனவும் அவர் உறுதியளித்தார். இலங்கைக்கான தேவையை நிறைவேற்ற கூடுதல் முயற்சிகள் மேற்கொள்ள இந்தியா தயாராக உள்ளது எனவும் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

# இந்தியா

## 74 வது குடியரசு தின விழா

- மூன்று நாள் பயணமாக இந்தியாவுக்கு ஜனவரி 25 அன்று வந்த எகிப்து அதிபர் அப்தெல் படாக் அல் - சிசி ஜனவரி 26 அன்று நடைபெறும் குடியரசு தின விழாவில் சிறப்பு தலைமை விருந்தினராக கலந்து கொண்டார். இந்தியாவின் குடியரசு தின விழாவுக்கு எகிப்து அதிபரை சிறப்பு விருந்தினராக அழைக்கப்படுவது இதுவே முதல் முறை.

- எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டு வர உறுதியான நடவடிக்கைகளை எடுப்பதில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுவது என இரு தலைவர்களும் ஒப்புக் கொண்டனர்.
- கலாச்சாரம், தகவல் தொழில்நுட்பம், இணைய பாதுகாப்பு, இளைஞர் விவகாரம் மற்றும் ஒளிபரப்பு ஆகிய துறைகளில் ஒன்றிணைந்து செயல்பட ஏதுவாக இரு நாடுகளுக்கிடையிலும் 5 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.
- அடுத்த 5 ஆண்டுகளில் இரு தரப்பு வர்த்தகத்தை ரூ.1 லட்சம் கோடி அளவுக்கு உயர்த்த முடிவு செய்யப்பட்டது. அரபு தலைவர்களில் செல்வாக்கு மிக்கவராக எகிப்து அதிபர் அல்-சிசி (68) உள்ளார்.
- எகிப்து அதிபர் அப்தெல் படாக் எல்-சிசி குடியரசுத் தலைவர் மாளிகையில் இருந்து ராணுவ அணிவகுப்பு நடைபெறும் கடமை பாதைக்கு குதிரைப் படை வீரர்கள் புடைசூழ குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தனது வாகனத்தில் அழைத்து வந்தார்.
- குடியரசுத் தலைவராகப் பதவியேற்ற பின்னர் திரவுபதி முர்மு கலந்துகொள்ளும் முதல் குடியரசு தின விழா இதுவாகும். குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தேசிய கொடியையேற்றி வைத்தார்.
- கமாண்டர் லெப், ஜெனரல் திராஜ் சேத் தலைமையில் ராணுவ அணிவகுப்பு தொடங்கியது. கடமை பாதையில், உள்நாட்டுத் தயாரிப்பான ஆகாஷ் ஏவுகணைகளை ஏந்திய ராணுவ வாகனங்கள், அர்ஜீன் பீரங்கி வாகனங்களுடன், பாதுகாப்புப் படையினர் அணிவகுத்து வந்தனர்.
- முதல் அணியாக எகிப்து நாட்டின் ராணுவ வீரர்கள் 144 பேர், கர்னல் மகமூத் முகமது அப்தெல் ஃபதா எல் கரசாவி தலைமையில் அணிவகுத்து வந்தனர். இந்திய குடியரசு

தினவிழா அணிவகுப்பில் எகிப்து படைப் பிரிவு பங்கேற்பது இதுவே முதல் முறையாகும்.

## இந்திய அறிவியல் மாநாடு

- இந்தியாவை சுயசார்பு உடைய நாடாக உருவெடுக்கச் செய்வதை இந்திய அறிவியல் சமூகம் இலக்காக கொண்டு செயல்பட வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.
- மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூரில் 108 வது இந்திய அறிவியல் காங்கிரஸ் மாநாட்டை பிரதமர் மோடி காணொலி காட்சி வாயிலாக ஜனவரி 3 அன்று தொடங்கி வைத்தார்.
- உலக மக்கள்தொகையில் 17 - 18 சதவீதம் பேர் இந்தியாவில் வசிக்கின்றனர். உலகளாவிய அறிவியல் கண்டுபிடிப்பு குறியீட்டில் கடந்த 2015 ஆம் ஆண்டில் 81 வது இடத்தில் இருந்த இந்தியா தற்போது 40 வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- உலக அளவில் ஸ்டார்ட்அப் நிறுவனங்களின் வளர்ச்சியில் முதல் 3 நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக உள்ளது. அறிவியல் தொழில்நுட்பம் மூலம் மிக நுட்பமான உபகரணங்களை இந்தியாவிலேயே உற்பத்தி செய்ய வேண்டும்.
- புதிய நோய்களை தீர்க்கும் வழிமுறைகளை கண்டறிய வேண்டும். உயிரி தொழில்நுட்பவியலின் உதவியுடன் சிறு தானியங்கள் அறுவடைக்குப் பிந்தைய செலவினங்களை குறைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.
- ஆண்டுதோறும் நாட்டில் உள்ள முன்னணி விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள் பங்கேற்கும் இந்திய அறிவியல் மாநாடு நடைபெறுவது வழக்கம். கடந்த 2 ஆண்டுகளாக கரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக இந்த மாநாடு நடத்தப்படவில்லை.

- இதில் பெண்களுக்கு அதிகாரமளித்தலுடன் நிலையான வளர்ச்சிக்கான அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் என்ற கருத்தை அடிப்படையாக வைத்து நடைபெற உள்ளது. மாநாட்டையொட்டி சிறார் அறிவியல் மாநாடும் நடைபெறவுள்ளது.

## அமலாக்கத் துறைக்கு புதிய மென்பொருள்

- சிபிஐ உட்பட விசாரணை ஏஜென்சிகளின் தகவல்களை எளிதில் அணுகுவதற்கான புதிய மென்பொருளை அமலாக்கத் துறை (ED) உருவாக்கி வருகிறது. அந்த மென்பொருளுக்கு "சீடோஸ்" (Core ED Operating System) என பெயரிடப் பட்டுள்ளது. இந்த மென்பொருள், நிதி முறைகேடு, பண மோசடிகளில் விரைவாக விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கவும், அவற்றின் தொடர்புகளை கண்டறியவும் பெரிதும் உதவும்.
- குறிப்பாக மத்திய புலனாய்வு அமைப்பு (சிபிஐ), தேசிய புலனாய்வு கிரிட் (நாட்கிரிட்) மத்திய நேரடி வரிகள் வாரியம் (சிபிடிடி), நிதி நுண்ணறிவுப் பிரிவு (எப்ஐயு) உள்ளிட்ட விசாரணை அமைப்புகளின் தரவுகளை இந்த மென்பொருளை பயன்படுத்தி அமலாக்கத் துறை அதிகாரிகள் எளிதில் பெறமுடியும். குற்றவாளிகளின் உண்மை விவரங்களை சரிபார்க்க மாதக்கணக்கில் ஆகும் நிலையில், இந்த மென்பொருளை பயன்படுத்தி உடனடியாக கண்டறியலாம்.
- நாடு முழுவதும் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைகளின் (எப்ஐஆர்) களஞ்சியம் என்று கூறப்படும் சிசிடிஎன்எஸ்/ஐசிஜெஎஸ் (குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு நெட்வொர்க் அமைப்பு / குற்றவியல் நீதி அமைப்பு) உடன் அனைத்து இடி அலுவலகங்கள் ஏற்கெனவே இணைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### தேர்தல் நன்கொடை வசூல்

- கடந்த 2020 – 21 ஆம் நிதியாண்டில் பாஜக ரூ.752 கோடியை நன்கொடையாக பெற்றிருந்தது. இந்த நிலையில் 2021 - 22 இல் பாஜக பெற்ற நன்கொடை 154 சதவீதம் அதிகரித்து ரூ.1,917 கோடியாக உயர்ந்துள்ளது.
- திரிணமூல் காங்கிரஸ் ரூ.545.7 கோடி நன்கொடை வசூலித்து இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- காங்கிரஸ் கட்சி பெற்ற நன்கொடையின் அளவு கடந்த நிதியாண்டில் ரூ.285.7 கோடியிலிருந்து 89 சதவீதம் உயர்ந்து ரூ.541.2 கோடியாக அதிகரித்துள்ளது.
- கடந்த 2021-22 நிதியாண்டில் அனைத்து 8 தேசிய கட்சிகள் ஒருங்கிணைந்து ஒட்டுமொத்த அளவில் ரூ.3,289 கோடியை நன்கொடையாக பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளன.
- அதே சமயம் சிபிஎம் கட்சி பெற்ற நன்கொடை 2020 - 21 இல் ரூ.171 கோடியாக இருந்த நிலையில் 2021 – 22 இல் ரூ.162.2 கோடியாக குறைந்தது. ஆனால் சிபிஐ பெற்ற நன்கொடை ரூ.2.1 கோடியிலிருந்து ரூ.2.8 கோடியாக சற்று உயர்ந்துள்ளது.
- பகுஜன் சமாஜ் (பிஎஸ்பி) நன்கொடை வசூல் ரூ.52.4 கோடியிலிருந்து ரூ.43.7 கோடியாக குறைந்துள்ளது.
- அதிக நன்கொடை பெற்றதைப் போலவே கடந்த 2021 - 22 நிதியாண்டில் செலவினத்திலும் பாஜகவே முதலிடத்தில் உள்ளது. அக்கட்சி, கடந்த நிதியாண்டில் ரூ.845.46 கோடியை செலவு செய்துள்ளது. காங்கிரஸ் ரூ.400 கோடி, திரிணமூல் ரூ.268.3 கோடி, பிஎஸ்பி 85.1 கோடி, சிபிஎம் 83.41 கோடி, சிபிஐ 1.2 கோடி, என்சிபி ரூ.32.2 கோடி செலவிட்டுள்ளன.

- மாநில கட்சிகளைப் பொறுத்த வரையில் திமுக கடந்த நிதியாண்டில் ரூ.318.7 கோடி நன்கொடை பெற்றுள்ளது. இதைத் தொடர்ந்து பிஜு ஜனதா தளம் (பிஜேடி) ரூ.307.2 கோடி, தெலங்கானா ராஷ்டிரிய சமிதி (டிஆர்எஸ்) ரூ.279.4 கோடி, ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் கட்சி ரூ.93.7 கோடி நன்கொடையை திரட்டியுள்ளதாக தேர்தல் ஆணைய வலைத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முகலாய தோட்டத்தின் பெயர் மாற்றம்

- சுதந்திரத்தின் 75 ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு குடியரசுத் தலைவர் மாளிகையில் உள்ள முகலாயத் தோட்டம் இனி அம்ரித் உத்யன் என அழைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
- டெல்லியில் உள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில் முகலாயத் தோட்டம் 15 ஏக்கரில் அமைந்துள்ளது. பிப்ரவரி மற்றும் மார்ச் மாதம் நடைபெறும் ஆண்டு விழாக்களில் மட்டும் இது பொதுமக்களின் பார்வைக்கு திறந்து வைக்கப்பட்டிருந்தது.
- இதை தற்போது ஆகஸ்ட் முதல் மார்ச் மாதம் வரை பொது மக்களின் பார்வைக்கு திறந்து விட முடிவு செய்யப்பட்டுள்ளதாக குடியரசு தலைவர் மாளிகை இணையதளம் தெரிவித்துள்ளது.

# சுற்றுச்சூழல்

## உத்தரகாண்ட்டின் ஜோஷிமத் நகரம் புதைகிறது

- உத்தரகாண்ட் மாநிலம் சமோலி மாவட்டத்தில் உள்ள ஜோஷிமத் நகரம் இமயமலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. அங்கு 2 நாட்களுக்கு முன்பு ஆங்காங்கே நிலவெடிப்புகள் ஏற்பட்டன. சில இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டன.

- உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள மலையோர நகரமான ஜோஷிமத் சிறிது சிறிதாக பூமிக்குள் புதைந்து வருகிறது. சுமார் 25 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் வசித்து வரும் ஜோஷிமத் நகரம் மோசமான புவியியல் அமைப்பை கொண்டிருக்கிறது.
- ஜோஷிமத் நகரில் உள்ள ஒரு கோயில் ஜனவரி 6 அன்று இடிந்து விழுந்தது. இதையடுத்து பொதுமக்கள் விரிசல் விழுந்த தங்களது வீடுகளை காலி செய்து விட்டு இரவு முழுவதும் கடும் குளிரில் காலி இடங்களில் தங்கினர்.
- ஜோஷிமத் நகரிலிருந்து சுமார் 80 கி.மீ. தொலைவில் உள்ள கர்ணபிரயாக் நகரிலும் 50 க்கும் மேற்பட்ட வீடுகளில் விரிசல் ஏற்பட்டுள்ளது.
- இந்நிலையில் கடந்த 1976 ஆம் ஆண்டிலேயே ஜோஷிமத் நகரம் எதிர்காலத்தில் சந்திக்கும் பிரச்சினைகள் குறித்து மிஸ்ரா கமிஷன் வெளியிட்ட அறிக்கை தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.
- அந்த அறிக்கையில், ஜோஷிமத் நகரில் வளர்ச்சிப் பணிகள் எந்த அளவுக்கு நடைபெற வேண்டும். என்னென்ன திட்டங்களை செயல்படுத்தக் கூடாது. எந்த இடங்களில் வீடுகளை அனுமதிக்கக் கூடாது என்பன போன்ற எச்சரிக்கைகளை அந்த கமிஷன் தெரிவித்துள்ளது. ஆனால் அதையும் மீறி கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருவதால் அந்த நகரம் புதையுறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.
- அதிக அளவிலான சுற்றுலாப் பயணிகள் வருகை, பருவநிலை மாற்றம், மலைப் பகுதியில் தொடர்ச்சியான கட்டுமானப் பணிகள் நடைபெறுவதே நிலச்சரிவுக்குக் காரணம் என்று உள்ளூர் மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.
- கடந்த 2022 ஆம் ஆண்டில் உத்தரகாண்ட் மாநிலத்துக்கு சுமார் 5 கோடி சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர். ஜோஷிமத் நகரத்துக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை குறித்து மத்திய, மாநில அரசுகளுக்கு மூத்த அதிகாரி ஒருவர் அனுப்பியுள்ள அறிக்கையில்

சுமார் 25,000 மக்கள் தொகை கொண்ட ஜோஷிமத் நகரில் குறைந்தது 25% பகுதி நிலச்சரிவு பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளது.

- தீவிரத்தை அறிய ஒரு அறிய ஒரு ஆய்வு நடத்தப்பட வேண்டும். நைனிடாலுக்கு 2017 இல் 9.1 லட்சம் பேரும், 2018, 2019 ஆம் ஆண்டுகளில் 9.3 லட்சம் பேரும், 2020 இல் 2.1 லட்சம் பேரும், 2021 இல் 3.3 லட்சம் பேரும் வருகை தந்துள்ளனர். இவ்வாறு அவர் அதில் கூறியுள்ளார்.

**காரணம்**

- பருவநிலை மாற்றம், மலைப் பகுதியில் தொடர்ச்சியான கட்டுமானப் பணிகள் நடைபெறுவதே நிலச்சரிவுக்குக் காரணம் என்று உள்ளூர் மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். இங்கு நெடுஞ்சாலைகள் அமைப்பதற்காக மலைப் பகுதிகள் வெட்டப்பட்டு அகலப்படுத்தப்படுகின்றன.
- இது நிலப் பகுதியை நிலைகுலையச் செய்யும் என்று இமயமலையின் டெக்னாகிக்ஸ் நிபுணரும், பெங்களூருவில் உள்ள என்ஐஏஎஸ் மையத்தின் புவியியல் நிபுணருமான சி.பி.ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.
- உத்தரகாண்ட் மலைப் பகுதிகளில் 825 கி.மீ. தொலைவுக்கு 'சார் தாம்' நெடுஞ்சாலை அமைப்பது தொடர்பாக சுற்றுச்சூழல் நிபுணர்கள் ஏற்கெனவே பல முறை கவலை தெரிவித்திருந்தனர். ஆனால் தேசியப் பாதுகாப்பை காரணம் கூறி உச்ச நீதிமன்றம் 2021 இல் எதிர்ப்புகளை நிராகரித்து விட்டது.
- இங்கு ஹெலாங் என்ற இடத்தில் இருந்து மார்வாரி என்ற பகுதி வரை சாலையை அகலப்படுத்தும் பணிகள் நடக்கின்றன. இதுவும் நிலப் பகுதியில் ஏற்படும் விரிசல்களுக்குக் காரணம் என்று குற்றம் சாட்டப்படுகிறது. இதனால் இந்த திட்டத்தின் கட்டுமானப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

## ரூ.1000 கோடி நிதி திரட்ட அரசாணை வெளியீடு

- தமிழக அரசு சார்பில் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக ரூ.1000 கோடி நிதி திரட்ட 'தமிழ்நாடு பசுமை காலநிலை மாற்ற நிதி'யை அமைத்து அரசாணை வெளியிடப் பட்டுள்ளது. மாநில மக்களுக்கு நிலையான மற்றும் காலநிலைக்கு ஏற்ற எதிர் காலத்தை உருவாக்க தமிழக அரசு உறுதி பூண்டுள்ளது.
- இதைக் கருத்தில் கொண்டு பசுமைத் தமிழ்நாடு இயக்கம், தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் மற்றும் தமிழ்நாடு ஈர நிலங்கள் இயக்கம் ஆகிய 3 முக்கிய திட்டங்களின் செயல்பாடுகளை கண்காணித்து வழிநடத்த தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனத்தை அரசு அமைத்துள்ளது.
- மேலும் தமிழ்க அரசின் நடப்பு நிதியாண்டு பட்ஜெட்டில் ரூ.1000 கோடியில் 'தமிழ்நாடு பசுமை கால நிலை மாற்ற நிதி' உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.
- அதன் அடிப்படையில் நிதி திரட்ட 'தமிழ்நாடு பசுமை காலநிலை மாற்ற நிதி'யை அமைத்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.
- இந்த நிதியானது தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் மூலம் ரூ.1000 கோடி நிதி அளவுடன் தேவைப்படின் மற்றொரு ரூ.1000 கோடிக்கு விரிவாக்கும் வாய்ப்புடன் நிர்வகிக்கப்படும்.
- இந்த நிதிக்கு அரசு பல்வேறு நிதி ஆதாரங்கள் மூலம் ரூ.100 கோடி அளவில் முதல் கட்டமாக தொடக்க மூலதனமாக அளிக்கும்.
- 10 ஆண்டு கால அவகாசத்துடன் 2 ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படும் வாய்ப்புள்ள பங்கு மூலதனங்கள், பங்குகளுடன் இணைக்கப்பட்ட இதர நிதி ஆதாரங்கள்,

கடனீட்டுப் பத்திரங்கள், மாற்றத்தக்க நிதி ஆதாரங்கள் மூலம் இதற்கு நிதி திரட்டப்படும்.

## தேசிய பசுமை ஹைட்ரஜன் திட்டத்துக்கு ஒப்புதல்

- சுத்தமான எரிசக்தி உற்பத்தி செய்யும் உலகளாவிய மையமாக இந்தியாவை மாற்றும் நோக்கத்தில் ரூ.19,744 கோடி மதிப்பிலான தேசிய பசுமை ஹைட்ரஜன் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- இதில் பசுமை ஹைட்ரஜன் மாற்றம் செயல்பாடுகளுக்கு ரூ.19,490 கோடியும், முன்னணி திட்டங்களுக்கு ரூ.1,466 கோடியும், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கு ரூ.400 கோடியும், இதர திட்ட செயல்பாடுகளுக்கு ரூ.388 கோடியும் ஒதுக்கப்படும்.
- பசுமை ஹைட்ரஜன் உற்பத்தியை ஆண்டுக்கு குறைந்தது 5 மில்லியன் மெட்ரிக் டன்களாக மேம்படுத்தும். இதோடு நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறனும் 2030 ஆம் ஆண்டுக்குள் 125 ஜிகா வாட்டாக அதிகரிக்கும்.
- இது ரூ.8 லட்சம் கோடி முதலீட்டுக்கு வழிவகுப்பதோடு, 2030 ஆம் ஆண்டுக்குள் 6 லட்சத்துக்கும் மேற்பட்ட வேலைகளையும் உருவாக்கும். நாட்டில் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி மூலம் ரூ.1 லட்சம் கோடிக்கு மேலான படிம எரிபொருள்களின் இறக்குமதியை குறைக்கும்.
- 2030 ஆம் ஆண்டுக்குள் பசுமை இல்ல வாயுக்களையும் ஆண்டுக்கு 50 மில்லியன் டன்கள் அளவுக்கு குறைக்கும். இத்திட்டத்தின் கீழ் அரசு மற்றும் தனியார் துறை பங்களிப்பில் ஆராய்ச்சி, மேம்பாட்டு அமைப்பு உருவாக்கப்படும்.

## இந்தியாவுக்கு 12 சிவிங்கி புலிகளை அனுப்புகிறது ஆப்பிரிக்கா

- சிறுத்தை இனத்தில் லெபர்ட், ஜாகுவார், பூமா, சீட்டா (சிவிங்கி புலி) என பல்வேறு வகைகள் உள்ளன. இந்தியாவின் சத்தீஸ்கர் வனப்பகுதியில் கடந்த 1950 ஆம் ஆண்டில் சிவிங்கி புலி தென்பட்டது. அதன் பிறகு கடந்த 70 ஆண்டுகளாக இந்தியாவின் எந்த பகுதியிலும் சிவிங்கிபுலி கண்டுபிடிக்கப்படவில்லை.
- 2022 ஆம் ஆண்டு செப்டம்பரில் ஆப்பிரிக்காவின் நமீபியா நாட்டில் இருந்து 8 சிவிங்கி புலிகள் இந்தியாவுக்கு கொண்டு வரப்பட்டன. இதில் 5 பெண், 3 ஆண் சிவிங்கி புலிகள் அடங்கும்.
- கடந்த செப்டம்பர் 17 ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடி மத்திய பிரதேசத்தின் குனோ - பல்புர் தேசிய பூங்காவில் 8 சிவிங்கி புலிகளை திறந்து விட்டார். தற்போது குறிப்பிட்ட எல்லைக்குள் இவை வாழ்கின்றன. விரைவில் அடர்ந்த வனப் பகுதியில் சிவிங்கி புலிகளை விடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.
- இந்த சூழலில் தென்னாப்பிரிக்காவில் இருந்து புதிதாக 12 சிவிங்கி புலிகளை இந்தியாவுக்கு கொண்டு வர மத்திய அரசு நடவடிக்கை எடுத்து உள்ளது. இத்தொடர்பாக இந்தியா, தென்னாப்பிரிக்கா இடையே அண்மையில் ஒப்பந்தம் கையெழுத்தானது.
- தென்னாப்பிரிக்காவில் இருந்து ஆண்டுதோறும் 12 சிவிங்கி புலிகளை இந்தியாவுக்கு கொண்டு வர திட்டமிடப்பட்டு உள்ளது. தொடர்ந்து 10 ஆண்டுகளுக்கு இத்திட்டம் செயல்படுத்தப்படும்.
- தென்னாப்பிக்க வனத் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், “இந்தியாவில் மீண்டும் சிவிங்கி புலிகளின் இனப்பெருக்கத்தை அதிகரிக்க செய்ய அரசு தீவிர முயற்சி செய்து

வருகிறது. இந்திய அரசின் கோரிக்கையை ஏற்று தென்னாப்பிரிக்காவில் இருந்து சிவிங்கி புலிகளை அனுப்ப உள்ளோம்" என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

- இந்திய வனத் துறை அதிகாரிகள் கூறும் போது, "ஒரு பெண் சிவிங்கி புலி தனது வாழ்நாளில் 9 குட்டிகள் வரை ஈனும். ஒரு குட்டி 20 மாதம் முதல் 24 மாதங்களில் பெரிய சிவிங்கி புலியாக வளரும். இவை ஆண்டு முழுவதும் இனப்பெருக்கத்தில் ஈடுபடும். அடுத்த சில ஆண்டுகளில் இந்தியாவில் சிவிங்கி புலிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்" என்று தெரிவித்தனர்.

## பொருளாதாரம்

### ரூ.500, ரூ.1000 பண மதிப்பிழப்பு நடவடிக்கை எடுத்தது செல்லும்

- மத்திய அரசு கடந்த 2016 இல் மேற்கொண்ட பண மதிப்பிழப்பு நடவடிக்கை செல்லும் என்று கூறிய உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு, அந்த நடவடிக்கைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை டிசம்பர் 2 அன்று தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.
- ரூ.500, ரூ.1000 நோட்டுகள் செல்லாது என கடந்த 2016 ஆம் ஆண்டு நவம்பர் 8 ஆம் தேதி இரவு பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார். மத்திய அரசின் இந்த திடீர் நடவடிக்கையால் பலர் பாதிக்கப்பட்டதாகக் கூறி அதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் 58 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.
- இந்த மனுக்கள் மீது விசாரணை நடத்த நிதிபதி எஸ்.ஏ. நசீர் தலைமையிலான 5 நீதிபதிகளைக் கொண்ட அரசியல் சாசன அமர்வு அமைக்கப்பட்டது. இந்த அமர்வில் நீதிபதிகள் பி.ஆர்.கவாய், ஏ.எஸ்.போபண்ணா, வி.ராமசுப்ரமணியம் மற்றும் பி.வி.நாகரத்னா ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

- பல்வேறு கட்ட விசாரணைகளுக்குப் பிறகு டிசம்பர் 2 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அரசியல் சாசன அமர்வில் இடம்பெற்ற 5 நீதிபதிகளில் 4 நீதிபதிகள், மத்திய அரசின் பண மதிப்பிழப்பு நடவடிக்கை செல்லும் என்று தீர்ப்பளித்தனர்.
- இதையடுத்து 4:1 என்ற விகிதாச்சாரத்தின் படி மத்திய அரசின் பண மதிப்பிழப்பு நடவடிக்கை செல்லத்தக்கதே என்று அரசியல் சாசன அமர்வு தீர்ப்பு வழங்கியது.
- 1978 இல் மேற்கொள்ளப்பட்ட பண மதிப்பிழப்பு நடவடிக்கையின் போது செல்லாத ரூபாய் நோட்டுகளை மாற்றுவதற்கு 3 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டு பின்னர் கூடுதலாக 5 நாட்கள் மட்டுமே கால அவகாசம் நீட்டிக்கப்பட்டது. இவ்வாறு உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு தெரிவித்துள்ளது.
- நீதிபதி நாகரத்னா பண மதிப்பிழப்பு நடவடிக்கைக்கு எதிரானத் தீர்ப்பை வழங்கியுள்ளார். அதில் அவர் கூறியுள்ளதாவது, பண மதிப்பிழப்பு முன்மொழிவு என்பது மத்திய அரசின் திட்டம் ரிசர்வ் வங்கியிடம் இது குறித்து நடத்திய ஆலோசனையில் வழங்கப்பட்ட கருத்தை, ஆர்பிஐ சட்டப் பிரிவு 26 (2) இன் கீழ் பரிந்துரை என்று கருத முடியாது.
- ரூபாய் நோட்டுகள் செல்லாது என்பது அரசிதழ் மூலமாக அறிக்கை வெளியிட்டு நிறைவேற்றக் கூடியதல்ல. அதை சட்டத்தின் மூலமாக செய்திருக்க வேண்டும். இருப்பினும், அந்த நடவடிக்கையின் நோக்கத்தை குறை காண முடியாது.
- கருப்பு பண ஒழிப்பு, பயங்கரவாதத்துக்கு நிதி அளிப்பதைத் தடுத்தல் உள்ளிட்ட பல முக்கிய அம்சங்கள் அதில் இடம் பெற்றிருந்தன. இவ்வாறு தனது தீர்ப்பில் நீதிபதி நாகரத்னா தெரிவித்துள்ளார்.

# அறிவியல் & தொழில்நுட்பம்

## எதிரி இலக்குகளை தகர்க்க ட்ரோன்கள்

- இமயமலை எல்லை பகுதிகளில் எதிரி இலக்குகள் மீது குண்டுகளை வீசும் வகையிலான ட்ரோன்களை ராணுவ ஆராய்ச்சி மேம்பாட்டு மையம் – டிஆர்டிஓ (DRDO) உருவாக்கியுள்ளது.
- இந்த ட்ரோன்களில் 5 கிலோ முதல் 25 கிலோ எடையுள்ள பொருட்களையும் கொண்டு செல்ல முடியும்.
- இது மகாராஷ்டிராவில் நடந்த 108 வது அறிவியல் மாநாட்டில் காட்சிப்படுத்தப்பட்டது. இந்த ட்ரோன்கள் சிக்கிம் மலைப் பகுதிகளில் 14,000 அடி உயரம் வரை பறக்க விட்டு வெற்றிகரமாக பரிசோதனை நடத்தப்பட்டது.
- 30 கிலோ எடையுள்ள பொருட்களை கொண்டு செல்லும் வகையில் இந்த ட்ரோனை மேம்படுத்தும் பணிகளை டிஆர்டிஓ மேற்கொண்டு வருகிறது. 5 கி.மீ சுற்றளவு வரை இந்த ட்ரோன் தானாக இயங்கம் திறன் படைத்தது.
- தேவையான இடங்களுக்கு இந்த ட்ரோன் சென்று பொருட்களை இறக்கி விட்டு மீண்டும் புறப்பட்ட இடத்துக்கே வந்து சேரும். இது எதிரி இலக்குகள் மீது குண்டுகளை வீசும் திறன் படைத்தது.
- உயரமான மலைப் பகுதி எல்லைகளில் இருக்கும் வீரர்களுக்கு மருந்து பொருட்களை கொண்டு செல்ல இந்த ட்ரோன்கள் உதவியாக இருக்கும் டிஆர்டிஓ அதிகாரி மகேஷ் சாகு தெரிவித்துள்ளார்.

## ஜப்பானில் முதன் முறையாக நடைபெறும் விமானப் படை போர் ஒத்திகையில் பங்கேற்கும் இந்திய பெண் பைலட்

- ஜப்பானில் ‘வீர கார்டியன் 2023’ என்ற பெயரில் இந்திய விமானப் படையும் ஜப்பான் விமானப் படையும் இணைந்து போர் பயிற்சியில் ஈடுபடுகின்றன. இந்த பயிற்சி

ஜப்பானின் ஹியாகுரி விமானப் படை தளம் மற்றும் அதன் அருகில் உள்ள இருமா விமானப் படை தளம் ஆகிய வான் பகுதிகளில் ஜனவரி 16 ஆம் தேதி முதல் 26 ஆம் தேதி 10 நாட்கள் நடைபெற உள்ளது.

- விமானப் படையில் 3 பெண் போர் பைலட்கள் தற்போது பணியாற்றி வருகின்றனர். அவர்களில் ஒருவரான அவனி சதுர்வேதி, இரு நாட்டு விமானப் படை போர் பயிற்சியில் பங்கேற்க விரைவில் ஜப்பான் செல்ல இருக்கிறார்.
- இவர் ரஷ்யாவின் சுகோய் ரக எஸ்யூ – 30 எம்கேஜ என்ற அதி நவீன போர் விமானத்தின் பைலட்டாக இருக்கிறார்.

## எஸ்யூ – 30 எம்கேஜ போர் விமானம்

- இது குறித்து மற்றொரு பைலட்டான பாவ்னா காந்த் கூறும் போது, "எஸ்யூ - 30 எம்கேஜ போர் விமானம் மூலம் வான்வெளியில் இருந்து தரை பகுதியையும், தரைப் பகுதியில் இருந்து வான்வெளியிலும் ஒரே நேரத்தில் தாக்குதல் நடத்த முடியும். மேலும் இதை மிக வேகமாகவும், குறைந்த வேகத்திலும் இயக்க முடியும். நீண்ட தொலைவு சென்று தாக்குதல் நடத்தும் வல்லமை படைத்தது" என்றார்.

## சியாச்சின் பனி மலையில் பணியமர்த்தப்பட்ட முதல் பெண் ராணுவ அதிகாரி

- நாட்டில் உள்ள மிகவும் உயரமான பனிச் சிகரங்களில் ஒன்றான சியாச்சின் பனி மலையில் பணியமர்த்தப்பட்ட முதல் பெண் ராணுவ அதிகாரி என்ற பெருமையை சிவா சவுகான் என்ற பெண் அதிகாரி பெற்றுள்ளார்.
- சியாச்சின் பனி மலை பூமியின் மிக உயரமான இடத்தில் அமைந்துள்ள போர்க்களம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது. இந்த உயரமான பனி மலைப் பகுதியில் 1984

ஆம் ஆண்டு முதல் இந்தியாவும் பாகிஸ்தானும் அவ்வப்போது சண்டையிட்டு வருகின்றன.

- கேப்டன் சிவா சவுகான், கடல் மத்திலிருந்து 15,632 அடி உயரத்தில் அமைந்துள்ள சியாச்சின் சிகர உச்சியில் பாதுகாப்புப் பணியில் இருப்பார். அவருக்கு பனிப் பாறையில் ஏறுதல், மிகவும் குளிர்நிலை பிரதேசத்தில் தன்னை பாதுகாத்துக் கொள்ளுதல், பனிப் புயல் போன்ற பிரச்சினையை எதிர்கொள்ளுதல், உயிர் வாழும் பயிற்சிகள் உள்ளிட்டவை வழங்கப்பட்டுள்ளன.

## அந்தமான் நிகோபாரில் உள்ள 21 தீவுகளுக்கு 'பரம்வீர் சக்ரா' விருதாளர்கள் பெயர்

- சுதந்திரப் போராட்டத் தலைவர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் பிறந்த நாள் பராக்கிரம தினமாக கொண்டாடப்படும் என்று கடந்த 2021 ஆம் ஆண்டில் பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார்.
- இதையொட்டி அந்தமான் நிகோபாரில் உள்ள பெயரிடப்படாத 21 தீவுகளுக்கு 'பரம்வீர் சக்ரா' விருது பெற்றவர்களின் பெயர்களை பிரதமர் நரேந்திர மோடி சூட்டினார். இதன் மூலம் புதிய வரலாறு எழுதப்படுகிறது.
- நேதாஜி வாழ்ந்த அந்தமான் தீவில் அவரது வாழ்க்கை, பங்களிப்பை நினைவுகூரும் வகையில் நினைவிடம் அமைக்கப்படுகிறது. அதற்கும் தற்போது அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.
- நாட்டில் முதல் முறையாக நமது மூவர்ண கொடியை ஏற்றிய இடத்தில் இன்று தேசியக் கொடி கம்பீரமாக பறக்கிறது. வீர சாவர்க்கர் போன்ற எண்ணற்ற மாவீரர்கள் நாட்டுக்காக இந்த மண்ணில் சிறைவாசம் அனுபவித்தனர்.

- கடந்த 2019 இல் டெல்லி செங்கோட்டையில் நேதாஜி அருங்காட்சியகம் திறக்கப்பட்டது. டெல்லி கடமை பாதையில் நேதாஜியின் பிரம்மாண்ட சிலை அமைக்கப்பட்டுள்ளது.

## ஐஎன்எஸ் வகிர்

- ஐஎன்எஸ் வகிர் நீர்மூழ்கி கடற்படையில் ஜனவரி 23 அன்று இணைக்கப்பட்டது. கடற்படை தளபதி ஹரிகுமார் இந்த நீர்மூழ்கியை நாட்டுக்கு அர்ப்பணித்து வைத்தார். சர்வதேச அளவில் அதிக நீர்மூழ்கி கப்பல்களை கொண்ட நாடாக சீனா முன்னணியில் உள்ளது.
- அந்த நாட்டின் கடற்படையில் 74 நீர்மூழ்கிகள் உள்ளன. அமெரிக்காவிடம் 69, ரஷ்யாவிடம் 66, ஜப்பான், தென்கொரியாவிடம் தலா 22 நீர்மூழ்கிகள் உள்ளன. இந்தியாவின் தற்போது 17 நீர்மூழ்கிகள் உள்ளன. இதில் 2 நீர்மூழ்கிகள் அணு ஆயுத தாக்குதல் நடத்தும் திறன் கொண்டது.
- பிரான்ஸின் நேவல் குரூப் நிறுவனத்துடன் இணைந்து ரூ.50,000 கோடி மதிப்பில் 6 நீர்மூழ்கிகளை தயாரிக்க மத்திய அரசு ஒப்பந்தம் செய்தது. முதல் நீர்மூழ்கியான ஐஎன்எஸ் கல்வாரி கடந்த 2017 ஆம் ஆண்டு கடற்படையில் சேர்க்கப்பட்டது.
- கடந்த 2019 இல் ஐஎன்எஸ் காந்தேரி, கடந்த 2021 ஆம் ஆண்டில் ஐஎன்எஸ் கரஞ்ச், ஐஎன்எஸ் வேலா ஆகியவை அடுத்தடுத்து கடற்படையில் இணைக்கப்பட்டன.
- புராஜக்ட் 75 திட்டத்தின் கீழ் கல்வாரி கிளாஸ் என்ற பெயரில் பிரான்ஸ் தொழில்நுட்பத்துடன் 6 நீர்மூழ்கிகள் தயாரிக்கப்படுகிறது. இதில் 5 வது நீர்மூழ்கியான வகிர் கடற்படையில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

- இந்த நீர்மூழ்கி 67.5 மீட்டர் நீளம், 6.2 மீட்டர் அகலம், 12.3 மீட்டர் உயரம் கொண்டதாகும். இது டீசல் – மின்சாரத்தில் இயங்கும்.
- இந்திய, பிரான்ஸ் கூட்டுமுயற்சியில் இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின் கீழ் ஐஎன்எஸ் வகிர் நீர்மூழ்கி உருவாக்கப்பட்டு உள்ளது. இந்த நீர்மூழ்கி இந்திய கடற்படையில் சேர்க்கப்பட்டிருப்பது ஒரு மைல் கல் ஆகும்.
- இந்தியாவின் குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் தயாரித்த பல்வேறு சாதனங்கள் வகிர் நீர்மூழ்கியில் பொருத்தப்பட்டுள்ளன. இந்த நீர்மூழ்கியில் அதிநவீன ஏவுகணைகளை ஏவும் 6 குழாய்கள் உள்ளன. 18 ஏவுகணைகள் பொருத்தப்பட்டு உள்ளன.

## உள்நாட்டில் தயாரிக்கப்படும் ஏவுகணைகள் கொள்முதல்

- பாதுகாப்புப் படைகளுக்குத் தேவையான ஏவுகணைகளை ரூ.4,276 கோடி மதிப்பில் உள்நாட்டில் கொள்முதல் செய்வதற்கான ஒப்புதலை பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையிலான பாதுகாப்பு கொள்முதல் கவுன்சில் வழங்கியுள்ளது.
- குறுகிய தூர வான் பாதுகாப்பு ஏவுகணைகளை (விசோராட்ஸ்), ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் – டிஆர்டிஓ (DRDO) உருவாக்கியுள்ளது. இந்த வகை ஏவுகணைகளை ரூ.1,920 கோடி மதிப்பில் வாங்க பாதுகாப்பு கொள்முதல் கவுன்சில் ஒப்புதல் வழங்கியுள்ளது.
- விசோராட்ஸ் ஏவுகணைகள் சீன எல்லையில் பயன்படுத்த தேவைப்படுகின்றன. 500 ஹெலினா ஏவுகணைகளை வாங்கவும் பாதுகாப்பு கொள்முதல் கவுன்சில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

- இலகு ரக ஹெலிகாப்டரில் பொருத்தப்படும் இந்த ஏவுகணைகள் எதிரி நாட்டு பீரங்கி வாகனங்களைத் தகர்க்கும் திறன் வாய்ந்தவை. இந்த வகை ஏவுகணைகள் ராணுவத்தின் தாக்குதல் திறனை மேலும் வலுப்படுத்தும்.
- கடற்படையின் பயன்பாட்டுக்காக சிவாலிக் வகை போர்க் கப்பல்களில் பயன்படுத்தக் கூடிய பிரம்மோஸ் சூப்பர்சானிக் ஏவுகணைகளின் லாஞ்சர்கள் மற்றும் கட்டுப்பாட்டுக் கருவிகள், அடுத்த தலைமுறை ஏவுகணைகளைக் கொள்முதல் செய்யவும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் போர்க் கப்பல்களின் தாக்குதல் திறன் மேம்படும் என்று பாதுகாப்புத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## தமிழ்நாடு

### 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இருபடி நிலை நடுகற்கள் கண்டெடுப்பு

- மேலசெக்காரக்குடியில் 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுடன் கூடிய இருபடி நிலை நடுகற்கள் மற்றும் சதிக்கல் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- இது போரில் வீர மரணமடைந்தவர்களுக்காக அமைக்கப்பட்ட நடுகல் ஆகும். 2 மீட்டர் உயரமுள்ள இந்த நடுகல்லில் ஒன்றரை மீட்டர் அளவு பகுதி வெளியில் தெரிந்த வகையில் உள்ளது.
- முன்பகுதியில் இரு பெண் சிற்பங்கள், இரு ஆண் சிற்பங்கள் என 4 சிற்பங்கள் உள்ளன. மேலிருந்து கீழாக முதலில் உள்ள ஒரு பெண் சிற்பம் போருக்குச் செல்லும் உடையில் வில் அம்பு விடுவது போன்று உள்ளது. அதன் உயரம் 20 செ.மீ, அகலம் 10 செ.மீட்டராக உள்ளது.

- 2 வது சிற்பத்தில் ஆண் சிற்பம் நாயக்கர் காலத்தைச் சார்ந்த மன்னர் போரிடுவது போன்று உள்ளது. இதன் உயரம் 35 செ.மீ. அகலம் 30 செ.மீட்டராக உள்ளது.
- 3 வது சிற்பம் நாயக்கர் மன்னர் சிற்பமாக உள்ளது. இதன் உயரம் 30 செ.மீ. கையில் வில் அம்பு, கத்தி மற்றும் வாள் ஏந்தி போர் புரியும் நிலையில் உள்ளது.
- 4 வது உள்ள பெண் சிற்பத்தின் உயரம் 30 செ.மீ, அகலம் 20 செ.மீ. போருக்கு செல்லும் நிலையில் வாளை தரையில் ஊன்றியபடி பெண் சிற்பம் உள்ளது.
- நடுகல்லின் முன்பகுதி மேல் பகுதியில் செவ்வக வடிவில் குழி ஒன்று கல்லை தூண்களில் நிலை நிறுத்துவதற்கான காடி போன்ற அமைப்பில் உள்ளது. இதன் நீளம் 12 செ.மீ. உயரம் 10 செ.மீ.
- இந்த நடுகல்லானது 16 அல்லது 17 ஆம் நூற்றாண்டை சேர்ந்த படிநிலை நடுகல். அதாவது விஜய நகர மன்னர்கள் காலத்தில் இப்பகுதியை ஆட்சி செய்த நாயக்கர் மன்னர் போரில் சண்டையிட்டு, வீர மரணமடைந்து, தனது மனைவிமார்களுடன் சிவலோகம் செல்வது போன்ற காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

## ஒரே நேரத்தில் யோகா பயிற்சி செய்து உலக சாதனை

- பள்ளி மாணவர்கள் ஒழுக்கம், கல்வியில் சிறந்து விளக்கவும், நாட்டுப்பற்று, நல்ல பண்புகளை வளர்த்துக் கொள்ளவும் செப்டம்பர் 14 ஆம் தேதி ‘சிற்பி’ திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.
- இதில் சென்னையைச் சேர்ந்த அரசுப் பள்ளி மாணவர்கள் 5 ஆயிரம் பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு வாரந்தோறும் காவல் உள்ளிட்ட பல்வேறு துறையினர் மூலம் சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

- எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் ஜனவரி 7 அன்று 'சிற்பி' திட்டத்தில் இணைந்துள்ள 5 ஆயிரம் மாணவ, மாணவிகளுக்கான யோகா பயிற்சி நடந்தது.
- ஒரே நேரத்தில் அரசுப் பள்ளிகளை சேர்ந்த 5,000 மாணவர்கள் யோகா பயிற்சி வகுப்பில் கலந்துக் கொண்டதற்காக உலக சாதனை யூனியன், தமிழக இளம் சாதனையாளர்கள் சாதனை புத்தகம், உலக இளம் சாதனையாளர்கள் புத்தகம் ஆகிய அமைப்பினர் காவல் ஆணையர் சங்கர் ஜிவாலிடம் சாதனைச் சான்றிதழ் வழங்கினார்.

## உலர் சாம்பலை விற்பனை செய்து வருவாய் ஈட்டும் மின் வாரியம்

- உலர் சாம்பல் விற்பனை செய்வதன் மூலம் மின் வாரியத்துக்கும் மாதந்தோறும் சராசரியாக ரூ.14 கோடி வருமானம் கிடைத்து வருகிறது.
- அனல் மின் நிலையங்களில் பயன்படுத்தப்படும் நிலக்கரி சாம்பலை விற்பனை செய்து வருவாய் ஈட்ட மின் வாரியம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.
- மின் வாரியத்துக்கு வடசென்னை நிலை 1, 2, மேட்டூரில் நிலை 1, 2 மற்றும் தூத்துக்குடியிலும் அனல் மின்நிலையங்கள் உள்ளன. இவை 4,320 மெகாவாட் மின் உற்பத்தி திறன் கொண்டவை.
- இந்த உலர் சாம்பலை 20 சதவீதம் செங்கல் உற்பத்தியாளர்களுக்கு இலவசமாகவும், மீதமுள்ள சாம்பலைத் தனியாருக்கு விற்பனையும் செய்யப்படுகிறது. மேட்டூர் ஆலையில் கடந்த 2021 – 22 ஆம் ஆண்டில் உலர் சாம்பலை விற்பனை செய்ததன் மூலம் ரூ.48 கோடி வருவாய் கிடைத்தது.

- இது அதற்கு முந்தைய 2020 – 21 ஆம் ஆண்டை விட ரூ.9 கோடி அதிகமாகும். மேட்டூர் மின்னுற்பத்தி ஆலை கடந்த 2021 – 22 ஆம் ஆண்டில் அதிகபட்சமாக 117 நாட்கள் இயக்கப்பட்டுள்ளதே இதற்கு முக்கியக் காரணமாகும்.

## தமிழகம் – ஒடிசா இடையே விளையாட்டு மேம்பாடு புரிந்துணர்வு ஒப்பந்தம்

- தமிழகம் – ஒடிசா இடையே விளையாட்டு மேம்பாடு புரிந்துணர்வு ஒப்பந்தம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தானது. ஒடிசாவில் கடந்த 13 ஆம் தேதி தொடங்கிய 15 வது உலககோப்பை ஹாக்கி போட்டி, வரும் 29 ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.
- தொடர்ந்து, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் ஒடிசா மாநில விளையாட்டு துறை அமைச்சக அதிகாரிகளுடன் விளையாட்டு மேம்பாடு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- இந்த ஒப்பந்தமானது இளம் திறமையாளர்கள், பயிற்சியாளர்கள், விளையாட்டு வீரர்கள், விளையாட்டு நிர்வாகிகள் மற்றும் விளையாட்டு விஞ்ஞானிகள் ஆகியோரின் திறமைகளை பரிமாறிக் கொள்ள உதவும்.
- இது இரு மாநிலங்களுக்கு இடையே விளையாட்டு உள்கட்டமைப்புகளை பகிர்ந்து கொள்வதற்கும், மேம்படுத்துவதற்கும் வழிவகுக்கும்.
- உலக தரம் வாய்ந்த வகையில் விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சி அளிக்கவும், சர்வதேச விளையாட்டு அகாடமிகள், விளையாட்டு கல்வி கூடங்கள், சிறப்பு மையங்கள், விளையாட்டு வளாகங்கள் மற்றும் பிற நவீன வசதிகளை உருவாக்கிடவும், உலகத் தரம் வாய்ந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கிடவும், சர்வதேச விளையாட்டு போட்டிகளை நடத்திடவும் இரு மாநிலங்களும் முறையான ஒத்துழைப்பு வழங்கும்.

## 15 லட்சம் ஆண்டுக்கு முந்தைய கல் கருவி படிமம் கண்டெடுப்பு

- அரியலூர் மாவட்டம் வாரணாசி பகுதியில் சுமார் 15 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு கற்கால மனிதர்கள் பயன்படுத்திய கல் கருவிகள் தொடர்பான படிமங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக திருவாரூர் மத்திய பல்கலைக்கழக கல்வெட்டியல் துறை பேராசிரியர் கூறினார்.
- திருவாரூர் தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தின் சமுதாயக் கல்லூரியில் கல்வெட்டியல் மற்றும் மரபு மேலாண்மை பயிலும் மாணவர்கள் 40 பேர், துறைப் பேராசிரியர் ரவி தலைமையில் அண்மையில் அரியலூர் மாவட்டம் வாரணாசி, அரசு சிமெண்ட் ஆலை, சாத்தனூர் ஆகிய பகுதிகளில் தொல்பொருள் படிமங்கள் குறித்த சேகரிப்பில் ஈடுபட்டனர்.
- மேலும் 2,000 ஆண்டுகளுக்கு முன்பு வரலாற்று கால நாகரீக மனிதர்கள் இரும்பை உருக்கி பயன்படுத்தியதற்கான இரும்பு கசடுகளும் கிடைத்தன. அத்துடன் அந்தப் பகுதி கடற்கரையாக இருந்திருக்க வேண்டும் என்பதற்கான தடயங்களும் இருந்தன.
- உலக புவியியல் வல்லுநர்களும், ஆராய்ச்சியாளர்களும் அரியலூர் பகுதியை ஆய்வுக்கு உரிய களமாக பயன்படுத்தினால் பண்டைக் கால நாகரிகங்கள், மனித சமூகத்தின் வரலாறு போன்ற பல்வேறு உண்மைகள் வெளிப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்றார்.

## பட்டியலினத்தவர், பழங்குடியினர் புத்தொழில் நிதித் திட்டம்

- புதுயுக தொழில்முனையில் அனைத்து சமூகத்தினரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை அடைவதற்காக ‘தமிழ்நாடு பட்டியலினத்தவர், பழங்குடியினர் புத்தொழில் நிதித் திட்டம்’ என்ற புதிய திட்டம் தமிழக அரசால் தொடங்கப்பட்டுள்ளது.

- இதன் மூலம் பட்டியலின மற்றும் பழங்குடியின பிரிவுகளைச் சார்ந்த தொழில் முனைவோரால் தொடங்கி நடத்தப்பட்டு வரும் புத்தொழில் நிறுவனங்களுக்கு பங்கு முதலீடாக அல்லது பிணையில்லா கடனாக நிதி வழங்கப்படும். இந்நிதியத்துக்கு முதற்கட்டமாக ரூ.30 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### ரூ.750 கோடி பங்கு முதலீடு

- முதற்கட்டமாக பேக் என் பேக், யூனிபோஸ், டவ் மேன், எக்கோ சாப்ட் சொல்யூசன்ஸ், பீஸ், ஆட்டோ மோசன் ஆகிய 5 நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்நிறுவனங்களுக்கு மொத்தம் ரூ.750 கோடி பங்கு முதலீடு செய்வதற்கான ஆணைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில் வழங்கினார். இப்புத்தொழில் நிறுவனங்களில் அரசே முதலீடு செய்வதன் மூலமாக இந்நிறுவனங்களுக்கு புதிய சந்தை வாய்ப்புகள் பெருகும்.

### தொடக்க நிதியம்

- இந்த நிதியிலிருந்து வளர்ந்து வரும் துறைகளான மேம்பட்ட உற்பத்தி, இயந்திரவியல், விண்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில்நுட்பம், டிஜிட்டல்மயமாக்கல், செயற்கை நுண்ணறிவு, உயிர் தொழில்நுட்பம், வெப் 3.0, ஆழமான தொழில்நுட்பம், காலநிலை தொழில்நுட்பம் போன்ற துறைகளில் முதலீடு செய்யப்படும்.
- இந்த நிதியம் தமிழக அரசின் நிதித் துறை மற்றும் தொழில் துறையின் கூட்டு முயற்சியால் தொடங்கப்பட்டுள்ளது. இந்த நிதியத்தை நிர்வகிக்கும் பொறுப்பு தமிழக உட்கட்டமைப்பு நிதிமேலாண்மை நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதியத்தில் தமிழக அரசு ரூ.50 கோடி முதலீடு செய்துள்ளது.

- தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் டைடல் பூங்கா ஆகியவை ரூ.50 கோடி முதலீடு செய்ய உறுதி அளித்துள்ளன. தமிழ்நாடு வளர்ந்து வரும் துறைகளுக்கான தொடக்க நிதியம் அதன் நிதியை 2023 – 24 ஆம் நிதியாண்டில் ரூ.500 கோடியாக உயர்த்தத் திட்டமிட்டுள்ளது.

## ‘கள ஆய்வில் முதல்வர்’ திட்டம் அறிமுகம்

- ‘கள ஆய்வில் முதல்வர்’ என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்த முதல்வர் ஸ்டாலின் இத்திட்டத்தின் படி முதல்கட்டமாக பிப்ரவரி 1 மற்றும் 2 ஆம் தேதிகளில் வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை ஆகிய 4 மாவட்டங்களில் ஆய்வுப் பயணம் மேற்கொள்கிறார்.
- “அரசு அலுவலகங்கள், மருத்துவமனைகளை நாடி வரும் மக்கள் மனநிறைவுடன் திரும்பிச் செல்லும் வகையில் பணியாற்ற வேண்டியது அரசு ஊழியர்களின் கடமை. அதை உறுதிப்படுத்த ஆய்வு மேற்கொள்வேன்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்திருந்தார்.
- இந்நிலையில் ‘கள ஆய்வில் முதல்வர்’ என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்திய முதல்வர் இத்திட்டத்தின்படி முக்கிய அமைச்சர்கள், அரசுத் துறை செயலர்கள், துறைத் தலைவர்களுடன் ஆய்வுப் பயணம் மேற்கொள்ள உள்ளார்.
- அப்போது குடிநீர், சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள், வருவாய் துறை மூலம் வழங்கப்படும் சேவைகள், ஊரக மேம்பாடு, நகர்ப்புற வளர்ச்சி, சாலை மேம்பாடு, வாழ்வாதாரத்தை உயர்த்தல், இளைஞர் திறன் மேம்பாடு, பொதுக் கூட்டமைப்பு வசதிகள், கல்வி, மருத்துவம், குழந்தைகள் நலன், ஊட்டச்சத்து போன்ற முக்கிய துறை சார்ந்த திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து முதல்வர் ஆய்வு மேற்கொள்ள உள்ளார்.

# விளையாட்டு

## முதல் பெண் நடுவர்

- கோஸ்டரிகாவுக்கும் ஜெர்மனிக்கும் இடையேயான போட்டியில் தலைமை நடுவராகச் செயல்பட்டதன் மூலம் ஃபிபா ஆடவர் உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியின் முதல் பெண் நடுவர் என்கிற வரலாற்று சாதனையைப் படைத்திருக்கிறார் ஸ்டெஃபனி ஃப்ரபார்ட்.
- இவருடன் பிரேசிலின் நியூஸா பேக், ஜெர்மனியின் கேரன் தியாஸ் மதினா ஆகிய இருவரும் நடுவர்களாகச் செயல்பட்டனர். உலகக் கோப்பை போட்டியில் ஆண்கள் அணியைக் கண்காணித்த முதல் பெண் நடுவர் குழு இது.

## சர்வதேச டென்னிஸ் போட்டி

- அடிலெய்டில் நடைபெற்று வந்த சர்வதேச டென்னிஸ் போட்டியில் பெலாரஸ் வீராங்கனை அரைனா சபலென்கா சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.
- மகளிர் ஒற்றையர் இறுதிப் போட்டியில் அரைனா சபலென்காவுடன், செக் குடியரசு வீராங்கனை லிண்டா நோஸ்வோ மோதினார்.
- இந்த போட்டியில் மிகவும் அபாரமாக விளையாடிய சபலென்கா 6 - 3, 7 - 6 (4) என்ற செட் கணக்கில் நோஸ்வோவை வென்று சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார். இது சபலென்கா பெறும் 11 வது டபிள்யூடிஏ பட்டமாகும்.

## விராட் கோலி

- இலங்கைக்கு எதிராக குவாஹாட்டியில் ஜனவரி 10 அன்று நடைபெற்ற போட்டியில் இந்திய அணியின் நட்சத்திர பேட்மேஸ் விராட் கோலி 113 ரன்கள் விளாசினார். சர்வதேச ஒரு நாள் போட்டியில் இது அவரது 45 வது சதமாக அமைந்தது.

- சொந்த மண்ணில் சச்சின் டெண்டுல்கர் மட்டுமே 20 சதங்கள் விளாசியிருந்தார். தற்போது விராட் கோலி அந்த சாதனையை டெண்டுல்கருடன் பகிர்ந்து கொண்டுள்ளார்.
- விராட் கோலி இந்த மைக்கல்லை 99 இன்னிங்ஸ்களில் எட்டியுள்ளார். சச்சின் டெண்டுல்கர் 160 இன்னிங்ஸ்களில் 20 சதங்களை அடித்திருந்தார்.
- தென் ஆப்பிரிக்காவின் ஹசிம் ஆம்லா, ஆஸ்திரேலியாவின் ரிக்கி பாண்டிங் ஆகியோர் உள்ளனர். இவர்கள் தலா 14 சதங்களை சொந்த மண்ணில் அடித்திருந்தனர்.
- இலங்கை அணிக்கு எதிராக இந்திய வீரர்களில் சச்சின் மட்டுமே அதிகபட்சமாக 8 சதங்கள் அடித்திருந்தார். இப்போது அந்த சாதனையை விராட் கோலி முறியடித்துள்ளார். விராட் கோலி இலங்கைக்கு எதிராக அடித்த சதங்கள் 9 ஆகும்.
- டெஸ்ட் (27 சதங்கள்), ஒரு நாள் போட்டி (45 சதங்கள்), டி20 கிரிக்கெட் (1 சதம்) என விராட் கோலி மொத்தம் 73 சதங்களை வேட்டையாடி உள்ளார்.
- அவருக்கு அடுத்தபடியாக ஆஸ்திரேலியாவின் டேவிட் வார்னர் 45 சதங்களும், ஸ்டீவ் ஸ்மித் 42 சதங்களும், இந்திய அணியின் கேப்டன் ரோஹித் சர்மா 41 சதங்களும் விளாசி உள்ளனர்.

## ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி 2023

- ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில் பெல்லாரசின் சபலெங்கா சாம்பியன் பட்டம் வென்றார். கிராண்ட்ஸ்லாம் தொடரில் அவர் பட்டம் வெல்வது இதுவே முதன்முறையாகும்.

- ஆஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் நடைபெற்று வரும் இத்தொடரின் 13 வது நாளான ஜனவரி 28 ஆம் தேதி மகளிர் ஒற்யைர் பிரிவு இறுதிப் போட்டியில் 5 ஆம் நிலை வீராங்கனையான பெல்லாரசின் சபலெங்கா, 22 ஆம் நிலை வீராங்கனையும், விம்பிள்டன் சாம்பியனுமான கஜகஸ்தானின் எலெனா ரைபகினாவை எதிர்த்து விளையாடினார்.
- சபலெங்கா 4 - 6, 6 - 3, 6 - 4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றார். கிராண்ட் ஸ்லாம் தொடரில் சபலெங்கா சாம்பியன் பட்டம் வெல்வது இதுவே முதன்முறையாகும்.
- ஆஸ்திரேலிய ஓபன் பட்டத்தை வெல்லும் 2 வது பெல்லாரஸ் வீராங்கனை என்ற பெருமையையும் பெற்றுள்ளார் சபலெங்கா. இதற்கு முன்னர் அந்நாட்டைச் சேர்ந்த விக்டோரியா அசரங்கா 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பட்டம் வென்றிருந்தார்.

## இந்தியா சாம்பியன் பட்டம் வென்று சாதனை

- ஐசிசி யு - 19 மகளிர் டி - 20 கிரிக்கெட் உலகக் கோப்பை தொடரின் இறுதி ஆட்டத்தில் இங்கிலாந்து அணியை 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்றது.
- தென் ஆப்பிரிக்காவில் நடைபெற்று வந்த இந்தத் தொடரின் இறுதி ஆட்டத்தில் போட்செஃப்ஸ்ட்ரூம் நகரில் ஜனவரி 29 அன்று இந்தியா – இங்கிலாந்து அணிகள் மோதின.
- முதல் பேட் செய்த இங்கிலாந்து அணி 17.1 ஓவரில் 68 ரன்களுக்கு சுருண்டது. இந்திய அணி சார்பில் டைட்டாஸ் சாது, அர்ச்சான தேவி, பர்ஷவி சோப்ரா ஆகியோர் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

- பின்னர் களமிறங்கிய இந்திய அணி 14 ஓவர்களில் 3 விக்கெட்களை மட்டும் இழந்து 69 ரன்கள் எடுத்து 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றது.

## ஆடவர் ஹாக்கியில் ஜெர்மனி சாம்பியன்

- ஆடவருக்கான ஹாக்கி உலகக் கோப்பையில் ஜெர்மனி அணி பெனால்டி ஷூட் அவுட்டில் 5 - 4 என்ற கணக்கில் பெல்ஜியத்தை வீழ்த்தி பட்டம் வென்றது.
- ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் உள்ள கலிங்கா மைதானத்தில் ஜனவரி 29 அன்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில் தொடக்கத்தில் பெல்ஜியம் ஆதிக்கம் செலுத்தியது.
- பின்னர் 28 வது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி கார்னர் வாய்ப்பை வெல்லன் நிக்லாஸ் கோலாக மாற்றினார். நிர்ணயிக்கப்பட்ட 60 நிமிடங்களில் ஆட்டம் 3 - 3 என்ற செட் கணக்கில் சமன் ஆனது. இதனால் வெற்றியை தீர்மானிக்க பெனால்டி ஷூட் அவுட் முறை கடைபிடிக்கப்பட்டது.
- இதில் ஜெர்மனி 5 - 4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றது. உலகக் கோப்பை தொடரில் ஜெர்மனி பட்டம் கைப்பற்றுவது இது 3 வது முறையாகும்.

# முக்கிய நபர்கள்

## முன்னாள் போப் 16-ம் பெனடிக்ட்

- முன்னாள் போப் 16 ஆம் பெனடிக்ட் (95) உடல்நலக் குறைவு காரணமாக ஜனவரி 1 2023 அன்று உயிரிழந்தார்.
- முன்னாள் போப் இரண்டாம் ஜான் பால் மறைவுக்குப் பின் போப்பாக பதவியேற்றவர் 16 ஆம் பெனடிக்ட் இவரது உண்மையான பெயர் ஜோசப் ரேட்சிங்கர்.

- ஜெர்மனியின் பவேரியா மாநிலத்தில் கடந்த 1927 ஆம் ஆண்டு ஏப்ரல் 16 ஆம் தேதி பிறந்தார். ஜெர்மனி ராணுவத்தில் பணியாற்றிய இவர் கடந்த 1945 ஆம் ஆண்டு ராணுவத்தில் இருந்து வெளியேறினார். அதன் பின் இவர் ஜெர்மனியில் இறைபியல் பாடம் கற்பித்தார்.
- கடந்த 1977 ஆம் ஆண்டு இவர் முனிச் நகரின் பிஷப்பாக நியமிக்கப்பட்டார். அடுத்த 3 மாதத்தில் இவரை கார்டினலாக போப் 6 ஆம் பால் நியமித்தார். முன்னாள் போப் இரண்டாம் ஜான் பால் மறைவுக்குப்பின் இவர் கடந்த 2005 ஆம் ஆண்டு போப்பாக தேர்வு செய்யப்பட்டார்.
- இவரது ஆண்டு பதவிக்காலம் 8 ஆண்டுகள் ஆகும். கடந்த 600 ஆண்டுகளில் பதவியை ராஜினாமா செய்த முதல் போப் 16 ஆம் பெனடிக்ட் என்பது குறிப்பிடத்தக்கது.

### டாக்டர் டெம்டன் எரிக்

- மனிதர்களின் உள் உறுப்புகள் பாதிக்கப்படும் போது உடலை அறுக்காமல் சிறு துளையிட்டு கணினி மூலம் திரையில் பார்த்து அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. அதை லேப்ராஸ்கோபிக் (Laparoscopic) அல்லது சாவிதுளை அறுவை சிகிச்சை (Keyhole Surgery) என்கின்றனர். லேப்ராஸ்கோபிக் அறுவை சிகிச்சையின் தந்தை என்று இந்தியாவில் “டாக்டர் டெம்டன் எரிக் உத்வாடியா” போற்றப்பட்டார்.
- டாக்டர் டெம்டன் உடல் நலைக்குறைவால் மும்பையில் ஜனவரி 8 அன்று காலை 11.15 மணிக்கு காலமானார். அவருக்கு வயது 88, டெம்டன் மறைவிற்கு பிரதமர் மோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

- இதுகுறித்து அவர் தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், "மருத்துவத் துறையில் அழிக்க முடியாத தடயத்தை டாக்டர் டெம்டன் பதிவு செய்து சென்றிருக்கிறார்.
- மகாராஷ்டிர மாநிலம் பைகுலாவில் உள்ள ஜேஜே அரசு மருத்துவமனையில் டாக்டர் டெம்டன் பல ஆண்டுகள் பணியாற்றினார். பின்னர் சில மாதங்களுக்கு முன்பு வரை பிரீச் கேண்டி மருத்துவமனையில் வெளிநோயாளிகள் பிரிவில் பணியாற்றி வந்தார்.
- மறைந்த டாக்டர் டெம்டனின் சிறந்த மருத்துவ சேவைக்காக மத்திய அரசு கடந்த 2017 ஆம் ஆண்டு "பத்ம விபூஷண்" விருது வழங்கி கவுரவித்தது.
- இந்தியாவிலேயே முதல் முறையாக ஜேஜே மருத்துவமனையில் கடந்த 1990 ஆம் ஆண்டு மே 31 ஆம் தேதி லேப்ராஸ்கோபிக் அறுவைச் சிகிச்சையை டாக்டர் டெம்டன் மேற்கொண்டார். அதுதான் ஆசியாவிலேயே முதல் லேப்ராஸ்கோபிக் அறுவை சிகிச்சை.

## முக்கிய விருதுகள்

### 16 வது ஆசிய திரைப்பட விருதுகள்

- ஆசிய திரைப்பட விருதுகள் கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. ஆசிய திரைப்படங்களை கவுரவிப்பதற்காக, ஹாங்காங்கைச் சேர்ந்த ஆசிய திரைப்பட விருது அகாடமி இதை வழங்கி வருகிறது.
- அதன்படி 16 வது திரைப்பட விருதுகள் மார்ச் 12 ஆம் தேதி ஹாங்காங் அரண்மனை மியூசியத்தில் வழங்கப்பட இருக்கிறது. இதில் இந்தியாவில் இருந்து 2 படங்கள் மட்டுமே தேர்வு செய்யப்பட்டுள்ளன.

- மணிரத்னம் இயக்கியுள்ள ‘பொன்னியின் செல்வன்’ சிறந்த இசை, சிறந்த திரைப்படம், படத்தொகுப்பு, தயாரிப்பு வடிவமைப்பு, ஒளிப்பதிவு, ஆடை வடிவமைப்பு ஆகிய 6 பிரிவுகளிலும், ராஜமவுலியின் ‘ஆர்ஆர்ஆர்’ படம், சிறந்த ஒளிப்பதிவு, சிறந்த விஷுவல் எபெக்ட்ஸ் ஆகிய 2 பிரிவுகளிலும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு சமூக சேவை விருதுகள்

- குடியரசுத் தினத்தன்று சமூக சேவை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய விருது பெறுவோர் பெயரை ஆளுநர் ஆர்.என்.ரவி வெளியிட்டுள்ளார்.
- சிறந்த சமூக சேவைக்கான விருதுக்கு விவேகானந்தா கிராமப்புற மேம்பாடு கழக செயலாளர் ஆர்.பி.கிருஷ்ணமாச்சாரி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- அதே போல சுற்றுச்சூழல் பாதுகாப்பு விருதுக்கு கோயம்புத்தூர் ‘சிறு துளி’ அமைப்பைச் சேர்ந்த வனிதா மோகன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- இந்த விருதுகளை பெறுபவர்களுக்கு தலா ரூ.10 லட்சம் பரிசு வழங்கப்படும். ஜனவரி 26-ம் தேதி குடியரசு தினத்தன்று சென்னை ராஜ்பவனில் ஆளுநர் ரவி வழங்கினார்.

## 106 பேருக்கு பத்ம விருதுகள் அறிவிப்பு

- குடியரசு தினத்தையொட்டி ஜனவரி 25 அன்று இரவு பத்ம விருதுகளை மத்திய அரசு அறிவித்தது. 6 பேருக்கு பத்ம விபூஷண் விருதுகளும், 9 பேருக்கு பத்ம பூஷண் விருதுகளும், 91 பேருக்கு பத்மஸ்ரீ விருதுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.
- பத்ம விபூஷன் விருது
    - ✓ முலாயம் சிங் யாதவ் (உ.பி.)
    - ✓ எஸ்.எம். கிருஷ்ணா (கர்நாடகா)

- ✓ ஜாஹிர் ஹீசைன் (மகாராஷ்டிரா)
- ✓ திலீப் மஹலானாபிஸ் (மேற்கு வங்கம்)
- ✓ பாலகிருஷ்ண தோஷி (குஜராத்)
- ✓ இந்திய கணிதவியலாளர் ஸ்ரீநிவாஸ் வரதன் (அமெரிக்கா)

- இதில் முலாயம் சிங் யாதவ், திலீப் மஹலானாபிஸ், பாலகிருஷ்ண தோஷி ஆகியோருக்கு அவர்களது மறைவுக்குப் பின்னர் பத்ம விபூஷண் விருது வழங்கப்படுகிறது.
- பத்ம பூஷண்
  - ✓ வாணி ஜெயராம் (தமிழ்நாடு)
  - ✓ கே.எம்.பிர்லா (மகாராஷ்டிரா)
  - ✓ கன்னட எழுத்தாளர் எஸ்.எல்.பைரப்பா
  - ✓ தீபக் தர் (மகாராஷ்டிரா),
  - ✓ சுவாமி சின்ன ஜீயர் (தெலுங்கானா)
  - ✓ சுமன் கல்யாண்பூர் (மகாராஷ்டிரா)
  - ✓ கபில் கபூர் (டெல்லி)
  - ✓ சுதா மூர்த்தி (கர்நாடகா)
  - ✓ கமலேஷ் டி.படேல்
- இது மட்டுமல்லாமல் தமிழகத்தைச் சமூக சேவகர் பாலம் கல்யாணசுந்தரம், சமூக சேவகர்களும், பாம்புப் பிடாரன்களுமான வடிவேல் கோபால் - மாசிசடையன், பரத நாட்டியக் கலைஞர் கல்யாணசுந்தரம் பிள்ளை, மருத்துவர் கோபால்சாமி வேலுச்சாமி,

புதுச்சேரியைச் சேர்ந்த மருத்துவர் டாக்டர் நளினி பார்த்தசாரதி, ஆந்திராவைச் சேர்ந்த இசையமைப்பாளர் கீரவாணி, பாலிவுட் நடிகை ரவீனா டாண்டன் உள்ளிட்ட 91 பேருக்கு பத்மஸ்ரீ விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.